2012 மே 16]

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிவியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் சிவியூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. காரமடை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சிவியூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

258—

மருத்துவர்களை நியமித்தல்

வினா எண் 431—திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளின் செயல்பாட்டினைக் கருத்திற்கொண்டும், மருத்துவர் மறு சீரமைப்பின்படியும், தற்போது விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு கூடுதலாக ஆறு புதிய மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, அப்பகுதியிலுள்ள ஏழை எளிய மற்றும் அனைத்து பொதுமக்களுக்கும் உரிய மருத்துவ சிகிச்சையினை

அளித்து சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மங்கலம்பேட்டையில் மூன்று மருத்துவ அலுவலர்களும், ஒரு நடமாடும் மருத்துவக் குழு மருத்துவ அலுவலரும் பணியாற்றி வருகின்றனர். இதே தொகுதிக்குட்பட்ட கருவேப்பிலங்குறிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவ அலுவலர்களும், புலியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவ அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

259—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 626—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஒன்றியம், பெருந்தொழுவு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், பெருந்தொழுவு கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அதனைத் தரம் உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

260—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1083—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், வேதியரேந்தல் கிராம துணைச் சுகாதார நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், வேதியரேந்தல் கிராம துணைச் சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

261—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1085—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்குப் பதில் அளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தியில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வூராட்சி ஒன்றியம், திருப்பாச்சேத்தி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

262—

மருத்துவக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 1149—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடியில் அரசு மருத்துவக் கல்லூரி துவங்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

263—

அரசு செவிலியர் கல்லூரி துவக்குதல்

வினா எண் 1159—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடியில் அரசு செவிலியர் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு செவிலியர் கல்லூரி துவங்குவது என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசு கொள்கை அளவில் முடிவு செய்து, ஆணையிடப்பட்டால், காரைக்குடியில் செவிலியர் கல்லூரி துவங்க ஆவன செய்யப்படும்.

2012 மே 16]

264—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1174—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், உதயமார்த்தாண்டபுரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள் தொகைக்கேற்ப மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே செயல்படுகின்றன. எனவே, இவ்வூராட்சி ஒன்றியம், உதயமார்த்தாண்டபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

265—

மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்

வினா எண் 1175—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

266—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1176—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், விக்கிரபாண்டியம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியத்தில் மக்கள்தொகை அடிப்படையில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே உள்ளதால், விக்கிரபாண்டியம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.